# இந்து மருத்துவப் பாரம்பரியத்தில் கருவளர்ச்சி குறித்த சிந்தனைகள் – சித்தர் பாடல்களை முன்னிறுத்தியது.

தி. கிஷாந்தினி[1]


## ஆய்வுச்சுருக்கம்:

*இந்துப் பண்பாட்டு வரலாற்றில் பல்வேறு சிந்தனைகள் வெளிப்படுத்தப்பட்டுள்ளன. அந்தவகையில் இந்து அறிவியல், இந்து அறவியல் என்பவை குறிப்பிடத்தக்கன. இந்து அறிவியல் சிந்தனைகள் இந்துப் பண்பாட்டின் ஆரம்ப நிலையிலிருந்தே முளைவிடத் தொடங்கி இன்று பல கிளைகளாகப் பிரிந்து விரிந்து விருட்சமாகி நிற்கின்றது. அக்கிளைகளில் இந்துக்களின் மருத்துவப் பாரம்பரியத்துக்கும் தனித்த இடமுண்டு. நோயும் மருத்துவமும் மனித இனப் பண்பாட்டு வரலாற்றில் பிரிக்க முடியாதவைகளாகும். ஒவ்வொரு மனித சமுதாயமும் தனக்கென ஒரு மருத்துவ அமைப்பு முறையைக் கொண்டுள்ளது. இந்துக்களைப் பொறுத்தவரையில் ஆயுர்வேதம், சித்த மருத்துவம் என இருபெரும் அறிவுப்புலங்களாக வளர்ச்சியுற்றது. மிகப்பழமையான மருத்துவமுறை என ஆயர்வேத மருத்துவ முறையைக் குறிப்பிடுவர். தென்னிந்திய மரபோடு குறிப்பாக தமிழகத்தின் பதினெண் சித்தர் மரபோடு தொடர்புற்று வளர்ந்த மருத்துவப் புலமாக சித்த மருத்துவம் விளங்குகின்றது. சித்த மருத்துவம் தமிழ் மருத்துவமாகும். தொன்மையுள் தொன்மையான இந்தியப் பெருநாட்டில் அண்மைக்காலம் வரை வெகுவாக வழங்கிவந்த இம்மருத்துவ முறை, இந்துக்களுக்கேயுரிய தனிச்சிறப்பு வாய்ந்தது. பண்டைச் சித்தர்கள் இதனைத் தமிழ்மொழியில் உருவாக்கித் தந்துள்ளனர். உண்மைத் தவநெறியில் பிறழாது உன்னதநிலையில் வாழ்ந்த சித்தர்கள் தங்கள் அருள்ஞான அறிவால் அதனை நன்குணர்ந்து மிகவும் துல்லியமாகக் கூறியுள்ளனர். அவர்கள் கூற்றுக்கள் அனுமானங்கள் அல்ல. மறுக்கமுடியாத அனுபவ உண்மைகள், நாளுக்கு நாள் மாறக்கூடியவை அல்ல: நாள் எல்லைக்குள்ளும் நாழிகை வரையறைக்குள்ளும் தீர்க்கக் கூடியவை. இந்நிலையில் கருப்பம் எப்படி உண்டாகிறது என்பதை முதலில் அறிந்தவர்கள் தமிழ்ச் சித்தர்களே ஆவார்கள். குழந்தை கடவுள் அருளால் உண்டாகிறது என்று மேல்நாட்டவர் நம்பி இருந்த காலத்தில் தமிழ் மருத்துவர் கருப்பக்கோளை ஆய்ந்து தெளிந்து இலக்கியங்கள் கண்டார்கள். இந்த இலக்கியங்களில் கூறப்பட்டுள்ள தெள்ளத் தெளிந்த கருத்துக்களில் ஒன்றுகூட மாறாமல் இன்றுவரை ஏற்றக் கொள்ளக்கூடியதாக இருக்கிறது. நவீன மருத்துவ வளர்ச்சிக்கெல்லாம் முன்னோடி தமிழ்ச்சித்தர்கள் கண்ட இலக்கியங்களே. இந்து மருத்துவப் பாரம்பரியத்தில் கருவளர்ச்சி குறித்து அகத்தியர், திருமூலர், யூகிமுனி மற்றும் பல சித்தர்கள் ஆராய்ந்து தெளிவுறுத்தியுள்ளார்கள். இவ்வாராய்ச்சி குறித்த எண்ணவோட்டங்களை சித்தர்களின் பாடல்களில் இழையோடியிருப்பதை இவ்வாய்வுப்புலம் இனங்கண்டிருக்கிறது. நவீன மருத்துவ முறைகளுக்கெல்லாம் முன்னோடியான கருவளர்ச்சி குறித்த சிந்தனைகளை சித்தர்கள் தமது ஞானஅறிவால் வெளிப்படுத்திய குறிப்புகள் இன்றைய நிலையிலும் நிதர்சனமானதாக அமைந்துள்ளமையை வெளிப்படுத்துவதே இவ்வாய்வின் நோக்கமாகும். இவ்வாய்வானது விபரண ஆய்வு முறையியலுக்கமைய செப்பனிடப்பட்டுள்ளது. பெறப்பட்ட தரவுகள் உள்ளடக்கப் பகுத்தறி ஆய்வு முறையியலுக்கும் தொகுத்தறி ஆய்வு முறையியலுக்கும் உட்படுத்தப்பட்டுள்ளன.*


**திறவுச்சொற்கள்:** சித்தர்கள், சித்த மருத்துவம், கருப்பம், சித்தர் பாடல்கள், கருவளர்ச்சி

[1]*இந்துநாகரிகத்துறை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்*
*kishanthiny.t@gmail.com*

**அறிமுகம்**

இந்துநாகரிக வரலாற்றில் பலதரப்பட்ட சிந்தனைகள் காணப்படுகின்றன. அவ்வகையில் இந்து அறிவியல் சிந்தனையும் முதன்மையானதாகும். இந்துமதமானது வெறுமனே ஆன்மிகத்தை மட்டும் கூறுகின்ற மதமல்ல. அது அறிவியல் பூர்வமான பல பிரபஞ்ச உண்மைகளைக் கூறுகின்ற மதமாகவும் உள்ளது. சிந்துவெளியில் குடியேறிய இந்துக்கள் காலம் காலமாகக் கைக்கொண்ட அறிவியல் சிந்தனைகளின் தொகுப்பை இந்து அறிவியல் எனலாம். அவ்வகையில், மருத்துவம், வானியல், அண்டவியல், இயற்பியல், இரசாயனவியல் போன்ற முறைசார்ந்த அறிவியற் புலங்களும் இரசவாதம், சோதிடம், குண்டலினியோகம், தியானம், காயசித்தி போன்ற முறைசாராத அறிவியற் புலங்களும் காலாதிகாலமாக காணப்பட்டுள்ளன.

இந்நிலையில் இந்து அறிவியற் புலத்தில் மருத்துவமானது முதன்மையானதாகக் காணப்பட்டது. பண்டைக்கால மருத்துவர்கள் உடல் உறுப்புக்களின் அமைப்புக்களை ஆழமாக அறிந்திருந்தனர். மருந்துகளைப் பற்றிய ஆரம்பகால குறிப்புக்கள் அதர்வ வேதத்தில் காணப்படுகின்றன. கி.பி 02ஆம் நூற்றாண்டில் இந்து சமுதாயத்தில் இரண்டு புகழ் பெற்ற ஆயுர்வேத மேதைகள் தோன்றினர். சுஸ்ருதர், சரகர் என்பவர்களே அவர்கள். இந்த ஆயுர்வேதம் மருத்துவம் ஆத்திரேயர் மரபு, தன்வந்திரி மரபு எனும் இரண்டு நிலைகளிலும் வளர்ந்து வந்தது. நோய்கள், அவை ஏற்படுவதற்கான காரணங்கள், சிகிச்சை முறைகள், மருந்துகள், அறுவைச்சிகிச்சை போன்ற பல அறிவியற் கருத்துக்களை உள்வாங்கிய மருத்துவமாக இந்து மரபில் போற்றப்பட்டு வருகின்றது.

இதேபோலவே, இந்து அறிவியற் சிந்தனைகளை உள்வாங்கிய மருத்துவமாக சித்த மருத்துவமும் வளர்ச்சி பெற்றுள்ளது என்பதை சித்தர் மரபுகளுக்கூடாக விளங்கிக் கொள்ளலாம். ‘‘சித்தர்களென்பார் பண்டைக் காலத்து அறிஞருள் ஒருசாரார் அவர்க்கு அறிவரென்றே பெயர் அமைந்திருந்தது’’ எனக் கா.சுப்பிரமணியபிள்ளை அவர்களும், ‘‘சித்தர்கள் என்பவர்கள் நமது நாட்டுப் பழம்பெரும் பேரறிவு படைத்த விஞ்ஞானிகளாவர். இவர்கள் தமிழகத்து விஞ்ஞானிகள் மட்டுமன்றி மருத்துவர்களுமாவர்’’ எனச் சாமி. சிதம்பரனாரும் குறிப்பிட்டுள்ளனர். பதினெண்சித்தர்கள் எனப் பிற்காலத்தில் அகத்தியர் தொடங்கி வரிசைப்படுத்தப்பட்ட பல சித்தர்கள் தனித்த தன்மையுடைய தத்தமது மருத்துவக் கோட்பாடுகளை முன்வைத்தனர்.

சித்த மருத்துவம் என்பது தமிழ் மருத்துவ முறையாகும். தமிழ் நாட்டுப் பண்டைச் சித்தர்கள் இதனைத் தமிழ் மொழியில் உருவாக்கித் தந்துள்ளார்கள். சித்தர்கள் தங்கள் அருள்ஞான அறிவால் அதனை நன்குணர்ந்து மிகவும் துல்லியமாகக் கூறியுள்ளனர். அவ்வாறு நன்குணர்ந்து அறிந்து துல்லியமாக வெளிப்படுத்திய கருத்துக்களில் கருவுற்பத்தி இன்றுவரை

ஏற்றுக்கொள்ளப்பட்டு வருகின்றது. கருப்பம் எப்படி உண்டாகிறது என்பதை முதலில் அறிந்தவர்கள் தமிழ்ச் சித்தர்களே ஆவார்கள். குழந்தை கடவுள் அருளால் உண்டாகிறது என்று மேல்நாட்டவர் நம்பி இருந்த காலத்தில் தமிழ் மருத்துவர் கருப்பக்கோளை ஆய்ந்து தெளிந்து இலக்கியங்கள் கண்டார்கள். இந்த இலக்கியங்களில் கூறப்பட்டுள்ள தெள்ளத் தெளிந்த கருத்துக்களில் ஒன்றுகூட மாறாமல் இன்றுவரை ஏற்றக் கொள்ளக்கூடியதாக இருக்கிறது. நவீன மருத்துவ வளர்ச்சிக்கெல்லாம் முன்னோடி சித்தர்கள் கண்ட இலக்கியங்களே.

**பிண்டம் - விளக்கம்**

பிண்டம் என்னும் தென்சொல், வடமொழி மரபின்படி ஈறுகெட்டுப் ‘பிண்ட’ என இருக்குவேதத்தில் நின்று: திரளை, உருண்டை என்னும் பொருள்களைக் குறிக்கும். அதனின்று பிண்டத்வ, பிண்டக், பிண்டன முதலிய தனிச்சொற்களையும், பிண்டகத்த, பிண்டகரண, பிண்டதர்க்க முதலிய கூட்டுச் சொற்களையும் உள்ளடக்கியதாக ஏறத்தாழ 70 வரையான வேறுபட்ட பொருள் நிலைகளில் கையாளப்படுகிறது.

ஆரியத்திற்குத் தமிழொடு/திராவிடத்தோடு தொடர்பில்லை என்றும், சம்ஸ்கிருதம் ஏறத்தாழ 500 சொற்களை மட்டும் திராவிடத்தினின்று கடன் கொண்டதென்றும் கூறும் பரோ என்னும் சம்ஸ்கிருதப் பேராசிரியர் கூட பிண்டம் என்னும் சொல் தென்சொல்லே என்று தம் ‘‘சம்ஸ்கிருதமொழி’’ என்றும் நூலில் குறித்துள்ளார் (இராமையா,ஏ.பு., 2005:55-56).

பிண்டம் என்ற சொல் உருண்டை எனப் பிங்கல நிகண்டும், உருவற்ற கரு (உறுப்பியல் பிண்டமும்), உடல் (உண்டி முதற்றே உணவின் பிண்டம்), சோற்றுத் திரள் (பிண்டமேய பெருஞ்சோற்று நிலையும்) எனப் பலவாறாகப் பொருள் கொள்ளப்படுகிறது (இராமையா,ஏ.பு., 2005:55-56). தொடர்ந்து பிண்ட உற்பத்தி தொடர்பான சொற்பிறப்பியல் பொருள்களை ஆராயின், பிண்டப்பை - சூலுற்றபின் கரு வளர்வதற்கும் பிறப்பு வரை இருப்பதற்குமான பெண்பால் உயிரிகளில் இருக்கும் உடலுறுப்பு, பிண்டப்புறக்கவசம் - கருப்பையைச் சுற்றியுள்ள புறத்தோல், பிண்டத்தோற்றம் - கருக்கொள்ளுகை, பிண்டச் செயநீர் - கருவுப்பினின்று வடிக்கும் நீர்ம மருந்து, பிண்டக்கரு – உருவற்ற கரு, பிண்டப்பூ நீர் - கருவின் மீது படிந்துள்ள மாவைப் போன்ற பொருள், பிண்டவமைப்பு – கருவின் அமைப்பு, பிண்ட சலனம் - கருவுற்ற காலத்தில் வயிற்றில் காணும் கருவின் அசைவு, பிண்டக்கல் - தொண்ணூற்றாறு நாள் முதல் நூற்றைம்பது நாள்களுக்குரிய கரு வளர்ச்சி, பிண்டச் சூம்பல் - கரு வளர்ச்சியடையாது மெலிந்து, நாளடைவில் மறைந்து போதல், பிண்டச் சிதைவு – கருப்பம் அழிவு என அமைகிறது (இராமையா,ஏ.பு., 2005:57-59).

**பிண்டோற்பத்தியின் அடிப்படைகள்**

உலகிலுள்ள பலகோடி உயிரணுக்கள் பலவகையாகப் பிரித்து நோக்கப்படுகிறது. இவை பலவகைப்பட்ட காரணங்களினால் தோற்றம் பெறுகிறது. அவற்றுள் பலவகைப்பட்ட காரணங்களாலே பிறக்கும் உயிர்களுக்கு முகம் உடலமைப்புக்களும், தரம் குணாதிசயங்களும் ஒன்றுக்கொன்று மாற்றங்களுடன் வேறுபட்டதாகப் பிறக்கிறது. வளர்கிறது. இந்த மேற்குறிப்பிட்ட பிறப்பும் தகுதியும் முன்வினைப்பயன்படி அந்தந்த நேரம் கலை, கிரகச்சாரம் எனப் பலவகைத் தாக்கங்களால் நிகழ்வதாகச் சித்தர்கள் எழுதி வைத்திருக்கிறார்கள்.

பிறப்பு என்பதே முற்பிறப்பில் ஒருவன் வாழ்ந்த – செய்த (கர்மா) செய்கையினாலேதான் விதவிதமாக ஒருவன் சேவகனாகவும், ஒருவன் வீரனாகவும், ஒருவன் கோழையாகவும், அழகு – அருவருப்பு, அறிவாளி - மூடன் என எல்லா நேர் - மறைகளுக்கும் மனிதன் முதல் எல்லா உயிர்களும் ஆட்பட்டு அதற்கேற்ற மரியாதை கிடைக்கிறது. குலம், கோத்திரம், குடும்பம், அழகு, அறிவு, நடத்தை, குணம் இன்ன பிறவெல்லாமும் அமைகிறது. இப்படி நடைபெறுவதை மனிதனால் மாற்ற இயலாது. அதைப்புரிந்து கொள்ளவும் முடியாது. ஒருவன் எந்த வீட்டில் பிறக்கிறான் என்பதும், அவன் பெறுகின்ற அறிவும், உடல் தேஜஸும் அவன் பெறுகின்ற தகுதிகளும் முற்பிறப்புச் சம்பந்தப்பட்டது. நான்குவகை யோனிகளில் எழுவகைப் பிறப்பு நிகழ்கிறது. தேவர், மானிடர், மிருகம், பட்சி, நீர்வாழ்வன, ஊர்வன, தாவரம் என்பனவாகும். அகத்தியரின் நூலான பரிபூரணம் 1200இல்,

"உரமாக ஏழுவகைத் தோற்றந்தானும்
உத்தமனே நாலுவகை யோனியாச்சு" (491.3-4)

குறிப்பிட்டுள்ளார்.

மானிடர்க்கு ஒன்பது நூறாயிரம் அதாவது ஒன்பது இலட்சம் முகபேதமென்று அகத்தியர் குறிப்பிட்டுள்ளார். அதாவது உலகிலுள்ள மொத்த மக்களுக்கும் இருக்கும் முகவமைப்பு மொத்தம் ஒன்பது இலட்சத்தில் ஏதாவது ஒன்றில் ஒத்துப் போகும்படி அமைந்துள்ளது என்கிறார். அதாவது உலகின் மொத்த சனத்தொகை 1000 கோடியாக இருந்தால் ஒருவனைப்போன்ற முகவமைப்பு 120 பேருக்கு இருக்குமென்பார். இது போலவே அனைத்துத் தேவர், மிருகம், பட்சி, நீர்வாழ்வன, ஊர்வன, தாவரங்கள் வரையுள்ள ஜீவராசிகளுக்கும் பொருந்தும் என்கிறார்.

மேலும் அகத்தியர், ஒரு ஜென்மத்தில் மனிதனாக இருந்தவன் பலமுறைகளில் மனித ஜென்மம் எடுக்கலாம். அது ஏழு முறையாகவும் இருக்கலாம். அதற்குக் குறைவாகவும் மனித ஜென்மம் எடுக்கலாம். மனித ஜென்மம் முடிந்து மறு ஜென்மத்தில் தேவர், மிருகம், பட்சி, நீர்வாழ்வன, ஊர்வன, தாவரங்கள் இவற்றில் ஏதாகிலும் ஒன்றாகத்தான் பிறப்பான் என்றும்

கூறுகிறார். மனிதன் மீண்டும் மனிதனாகவும் பிறப்பான் என்ற குறிப்புக்களும் உள்ளன. கல்லாகவோ மண்ணாகவோ இருப்பது ஜடப்பொருள்கள். இவை உயிரற்றவைகளாகும். அவைகளுக்குப் பிறப்புமில்லை என்கிறார்.

**அண்டமும் பிண்டமும்**

ஆகாய வெளியாகிய அண்டத்துக்கும் உடம்பாகிய பிண்டத்துக்கும் இடையில் உள்ள தொடர்பைக் கவனிக்கும்போது அண்டத்தில் உள்ள பொருள்கள் பிண்டத்திலும் உண்டு என்று சித்தர்கள் குறிப்பிடுகின்றனர். இதனை,

''அண்டத்தி லுள்ளதே பிண்டம்
பிண்டத்தி லுள்ளதே அண்டம்
அண்டமும் பிண்டமும் ஒன்றே
அறிந்துதான் பார்க்கும் போதே''

எனச் சட்டமுனி ஞானம் கூறுகின்றது (இராமநாதன்,பொ., 2004:168).

பஞ்சபூதத்தினால் உருவாகும் உடலுக்குத் தேவையான அனைத்தும் வாயுரூபமாக அண்டத்தில் உள்ளன. இதனை இன்றைய விஞ்ஞானப்படி உயிர் தோற்றத்துக்குத் தேவையான வாயுக்களான பிராணவாயு (Oxygen), நைதரசன் (Nitrogen), ஐதரசன் (Hydrogen), காபன் (Carban) ஆகியவை அண்டத்தில் உண்டென்று கூறுகின்றனர் (நடராஜன்,கே., 1980:40). பிராணவாயு ஐதரசன் வாயுவுடம் சேர்ந்து ($H_2O$) நீர் உண்டாகிறது. உயிர் வாழ்வதற்கு பிராண வாயு இன்றியமையாதது. சுவாசிப்பதற்கும் பிராணவாயு தேவை. அதேபோல் தாவரங்களும் மற்றும் உயிரினங்களும் நீரின் உதவியால் தங்களுக்குத் தேவையான உணவுப் பொருட்களைப் பெற்றுக் கொள்ளவும், கரைக்கவும், செரிப்பிக்கவும் செய்கின்றது. இவை அனைத்தையும் கொண்டு உயிருக்கு ஆதாரமான பொருட்கள் யாவும் அண்டத்திலிருந்து மாறிப் பிண்டமாகப் பரிணமிக்கின்றன.

இவ்வாறு அண்டத்திலுள்ள வாயுக்களின் சேர்க்கையின் மாறுபாடுகளால் பிண்டமாகிய உடல் பரிணமித்தது. எடுத்துக் காட்டாக ஒரு கலம் உள்ள அமீபா என்ற தாவரமே முதன்முதலில் நீரில் தோன்றிய உயிர் என்பது விஞ்ஞானிகளின் கருத்து. இதனைச் சித்தர்கள், முதல் ஜீவராசி நீரிலேயே தோன்றியதென்றும் அதுவே பாசி, அது ஒரு தாவரவர்க்கம், அதன்பின் கடல்பஞ்சு என்றும், இவ்வாறாகச் சின்னஞ்சிறு புழுக்கள் போல உண்டாகி மேலோடுகளுடன் காணப்பட்டவை என்றும் அவ்வாறு தோன்றியது முத்துச்சிப்பி, காலக்கிரமத்தில் சிறு செடிகள் உண்டாயிற்று எனவும், பலகோடி வருடங்களில் ஏழுவகை உயிரினங்கள் தோன்றியதெனவும் கூறுகின்றனர் (இராமநாதன்,பொ., 2004:269).
இதனை மாணிக்கவாசகர்,

''புல்லாகிப் பூடாய் புழுவாய் மரமாகிப்
பல்மிருகமாகிப் பறவையாய்ப் பாம்பாகி

கல்லாய் மனிதராய் பேயாய் கணங்களாய்
வல்லசுரராகி முனிவராய்த் தேவராய்
செல்லா நின்ற இத்தாவர சங்கமத்துள்
எல்லாப் பிறப்பும் பிறந்திளைத்தேன்'' (திருவா. சிவபுராணம்: 26-31)

எனக் குறிப்பிடுகிறார்.

இந்துக்கள் இறந்தவர்களின் உடலைத் தீயில் எரித்துப் பின்னர் அந்தச் சாம்பலை நீரில் கரைப்பது வழக்கமாகவுள்ளது. இதனை ஒரு சடங்காகவும் செய்து வருகின்றனர். இச்சடங்கு முறையானது ஆழ்ந்த தத்துவச்செழுமை கொண்டதாக அறியப்படுகிறது. அதாவது ஐம்பூதங்களால் உண்டான உடம்பை இறுதியில் அக்கினியால் எரித்து எங்கிருந்து வந்தனவோ அங்கேயே, அதாவது ஐம்பூதங்களிடம் ஒப்படைத்து, உயிர் எங்கு தோன்றியதோ அங்கு அதனையும் ஒப்படைப்பதாகக் கருதி நீரில் சாம்பலைக் கரைத்து விடுகின்றனர். இவற்றிலிருந்து இந்துமதமும், உயிர் முதன்முதலில் தோன்றியது நீரினிலேயே என்பதை முன்னரே கூறியிருப்பது புலனாகும்.

பரிணாம தத்துவப்படி நீரில் உள்ள பல்லாயிரம் தாவரங்களால் நீர், நிலம் ஆகியவற்றில் வாழும் ஜீவராசிகளாகப் பரிணமித்தன. அண்டத்தில் உள்ள ஐம்பூதங்களே அனைத்துப் பொருட்களுக்கும் ஆதாரம். எனவேதான் அண்டத்திலுள்ளதே பிண்டத்திலும் என்று சொல்வது பொருத்தமாகி விட்டது. (இராமநாதன்,பொ., 2004:170)

அண்டத்தில் உள்ளதே பிண்டத்திலும் என்ற அடிப்படைகளை பிண்டோற்பத்தியுடன் தொடர்புபடுத்துகிறார் திருமூலர். இதனைப் பஞ்சபூத பிண்டோற்பத்தி எனும் பகுதியில் குறிப்பிட்டுள்ளார். அதாவது நினைத்தற்கு ஏதுவாகிய கருப்பாயத்தில் உள்ள ஆகாயத்தில் பொருந்திய சுரோணிதமானது பூமியாகும். சுக்கிலம்; அக்கினியும் வாயுவுமாகக் கூடியிருக்கும். ஜலமானது இந்த இரண்டையும் சமமாகக் காப்பாற்றும் என்கிறார்.

''உன்னிய கர்ப்பக்குழியாம் வெளியிலே
பண்ணிய நாதம் பகந்த பிருதுவி
வன்னியும் வாயுவுமாயு றுஞ் சுக்கிலம்
மன்னிச் சமனாய் வளர்க்குமுதகமே'' (குணவாகடத்திரட்டு, 15:1-2)

மேலும், ஜலமானது இரத்தமாக அக்கினியினாலும் வாயுவினாலும் தனித்தனியாக அவயவங்களை உண்டாக்கி வைக்கும். அதாவது பகுதியாகிய உரோமங்களையும், சொல்லப்பட்ட மாமிசத்தையும் எலும்புகளையும் நிலைத்திருக்கப்பட்ட நவத்துவாரங்களையும் பிரித்துக் காட்டும் எனவும் கருவுற்பத்தியின் அடிப்படைகள் வெளிப்படுத்தப்பட்டுள்ளன.

''உதகமுதிர முறுங்கனல் வாயுவால்
சித குறுமங்கங்கள் செய்து முடித்திடும்
பதகுறுமு ரோமம் பகர் தசையத்தி
நிதகுறுமொன்பது வாயிலும் நீங்குமே'' (குணவாகடத்திரட்டு, 15:3-4)

கருவாகி வளரும் இத்தேகமானது நிலம், நீர், தீ, காற்று, ஆகாயம் எனப்படும் பஞ்சபூதத்தால் வளர்ந்து நிற்கிறது. இத்தேகத்திலுள்ள மாமிசமானது நிலத்தின் கூறாகவும், இரத்தம், நீர், பால், குறி போன்றவைகள் நீரின் கூறாகவும், தேகத்திலுள்ள உஷ்ணம் தீயின் அம்சமாகவும், நாசிவழியில் ஓடும் மூச்சுக்காற்றானது வாயுவின் கூறாகவும், காது மற்றும் கேட்கும் சக்தி போன்றவைகள் ஆகாயத்தின் கூறாகவும் உள்ளன.

''இருந்த இவ்வைந்தால் எடுத்து சடமிது
பிரிந்திடும் மாமிசம் பிருதுவின் மயமாகும்
சொரிந்திடும் இரதநீர் சொற்குறி அப்புவாம்
வருந்திய வன்னி வளமாய் வெதுப்பமே'' (திருமூலர் கருக்கிடை வயித்தியம் 600)

பஞ்சபூதங்கள் பலவிகிதங்களில் சேர்ந்து பல பொருட்களாகப் பரிணமிப்பதை ''பஞ்சபூதப் பஞ்சிகரணம்'' என்று கூறுவர். இதனைச் சைவசித்தாந்தம் உலக உற்பத்திக் கோட்பாட்டில் விளக்கியுள்ளது. அதாவது நுண்நிலையிலுள்ள பஞ்சபூதங்கள் பல விகிதங்களில் சேரும்போது அருவ நிலையிலிருந்து உருவ நிலையடைகின்றன.

**கருப்பம் உண்டாகும் முறை**

சுக்கிலம், ஆர்த்தவம், ஜீவாத்மா இவற்றின் சேர்க்கையினால் ஏற்படும் வஸ்து கருப்பம் எனப்படும். ஒன்பது விதமான தோஷம் நீங்கி நிர்மலமாயுள்ள சுக்கிலமும், அதேவிதமான ஆர்த்தவமும் ஒன்று கூடும்போது ஜீவாத்மாவானது முன்ஜென்மத்தில் தான்செய்த சுபாசுப கர்மங்களாலும், அவித்தை முதலிய கிலேசங்களாலும் ஏவப்பட்டு, அகிற்கட்டையும் அதனைக் கடைகின்ற கருவியும், கடையுஞ்செயலும் ஒன்று சேரும் போது அக்கினி உண்டாவது போலச் சாதனங்களின் கூட்டு முறைக்கு இணங்கக் கருப்பமாகப் பரிணமிக்கிறது.

மிகவும் சூக்குமமாகவும், சுக்கில ஆர்த்த ரூபமாகவும், மனத்தத்துவத்துடன் கூட அதைப் பின்பற்றியனவாகவும், மாதவிடாய் காலத்தில் ஆகாரத்தின் சாராம்சங்களால் உண்டானவையுமான பஞ்சமகா பூதங்களின் கூட்டுறவினால் அந்த ஜீவாத்மா மாதாவின் வயிற்றில் கிரமமாகக் கருப்பரூபமாய் வளர்ந்து வருகிறது.

சூரிய கிரகணங்களின் ஒளி ஒரு படிகமணியினால் மறைக்கப்பட்ட போதிலும் கட்டை முதலியவைகளில் பற்றியெரிவது போல, ஒரு விதமான குறியும் காண முடியாமல் அப்படிகமணியினும் ஊடுருவிப் பாய்வது போல ஜீவாத்மாவும் கருப்பாயத்துள் பிரவேசித்து

விடுகிறது. காரியங்கள் யாவும் காரணங்களை அனுசரித்தே ஏற்பட வேண்டியிருப்பதால் அக்காரியங்களுக்கு காரணங்களின் தன்மையே உண்டாகிறது. காரியம் - கருப்பம், காரணம் - சுக்கில, சுரோணிதங்கள். ஆகையால் உருக்கி வார்க்கப்படும் உலோகமானது, அந்த அந்த அச்சின் உருவங்களுக்கேற்றவாறு பற்பல ரூபங்களை அடைவது போல, ஜீவாத்மாவும், எந்தெந்தப் பிராணியின் கருப்பத்தில் பிரவேசிக்கின்றதோ அதற்கேற்ற உருவங்களைப் பெற்று விடுகிறது.

மனித உடல், இரண்டு மூல கலங்கள் ஒன்றுகூடிப் பல்வேறு உடலணுக்களாகத் திரண்டு உண்டாகியுள்ளது. கருவுற்பத்தியில் பிண்டக்கரு கலங்கள் இரண்டாகப் பிரிந்து, கூட்டுவாழ்வு பெற்று, உயிர்க்கருமங்களை நடத்துகின்றன. பெருகிய கலங்கள் பல கண்ணறை கலங்களாக அமைகின்றன. கரு வளரும் நிலைகள் ஒவ்வொன்றிலும் தொண்ணூற்றாறு தத்துவங்கள் அமைந்திருப்பதால், அவைக்கேற்ப கண்ணறை கலங்கள் அமைந்து விடுகின்றன. கண்ணறை அணுக்கள் பல உறுப்புக்களைத் தாமே ஆக்கிக் கொண்டு மனித உருவத்தைச் செய்து முடிக்கின்றன. இவற்றைக் கொண்டு கண்ணறைகளைத் தாது என்றும் உடல் தாது என்றும் சித்தர்கள் கூறியுள்ளனர் (இராமநாதன்,பொ., 2004:196).

இவ்வாறு பிறந்த குழந்தையின் உடல் அதன் கையின் அளவுப்படி தொண்ணூற்றாறு விரற்கடை உயரமிருக்கும். இவ்வுடல் இரசம், இரத்தம், மாமிசம், மேதம், அத்தி, மச்சை, சுக்கிலம் என்ற வகையில் உருவாக்கி சரீரத்துக்கு உயிர்ச்சட்டை கொடுத்து வாத பித்த சேத்துமமாக்கி விடுகின்றன என்கிறார்.

''சென்மமார் சரீரந் தொண்ணூற்றாறு அங்குலமாம்
செய்கின்றவர் அவர்கள் கையாலே தான்
தன்ன மாம் ரசம், இரத்தமா ங்கிசமு மேதை
தசை மச்சையொடு சுக்கிலந்தா தேழாகி
உண்மை முரு வெண்ணுஞ்ச ரீரமாகி
உயிர்சட்டை ரசஞ்சேர்த்து ரோமமாகி
வன்னமாம் வாத பித்த சேட்பமாகி
வருகின்ற சட்டத்தினிட வன்மை கேளே''(யூகிமாமுனி வைத்திய சிந்தாமணி800 - 22)

**ருதுவாகும் காலம்**

ஸ்திரிகள் ஒவ்வொரு முறையும் ருதுவாகும் போது அவர்களுக்கு ஆவர்த்தவம் முதல் பன்னிரண்டு நாட்களும் ருதுகாலமாகும். அவற்றுள் முதலில் மூன்று நாட்களும், பிறகு 11வது தினமும், அதற்குப்பிறகும் கூடுவதற்குத் தகாதவைகள் என அஷ்டாங்க ஹிருதயம் கூறுகிறது. சித்தர் நூல்,

''ஆண்மையென்று மங்கையர்கள் பூக்குங் காலம்
அன்றுமுதல் பதினாறு நாளும்'' (அகத்தியர் வல்லாதி 600, 79:01)

என்று குறிப்பிடுகிறது.

"நாளப்பா ஐந்துக்கும் பலமே தென்றால் நலம் பெறவே"

என அகத்தியர் வைத்திய சாரமும், (சுப்பிரமணியதேசிக சுவாமிகள், 1957:6)

"ஆகாநாள் விந்துவிட்ட ஐந்தாம் நாள்"

என அகத்தியர் பிண்டோற்பத்தியும் (சுப்பிரமணியதேசிக சுவாமிகள், 1957:21) குறித்து நிற்கிறது.

பகிஷ்டையான பெண்கள் நான்கு தினம் வரையில் மனைக்குப் புறம்பே இருத்தல் வேண்டும். பகிஷ்டையான நான்காம் நாள் புனலாடியபின் தூய்மையாகின்றாள். பகிஷ்டையான ஆறாம் நாள் முதல் 18ஆம் நாள் வரையிலும் உள்ள இரட்டைநாள் ஏழில் புணரில் ஆண்மகவு உருவாகும். ஐந்து முதல் 18ஆம் தினம் வரையிலும் உள்ள ஒற்றை நாளில் புணரில் பெண்மகவு பிறக்கும் என்று சித்த மருத்துவ அகராதி கூறுகிறது. இந்த அகராதிகள் உருவாவதற்கு முன்னரே பகுப்பாய்ந்து முடிவுகளைக் கண்டனர் சித்தர்கள். அஷ்டாங்க ஹிருதயம் இது குறித்து சிறப்பாகக் கருத்துரைத்துள்ளது. (சுப்பிரமணியதேசிக சுவாமிகள், 1957:14) 5, 7, 9, 11 இந்த ஒற்றைப்பட்ட நாட்களில் கூடுவதால் அவர்களுக்கு இயற்கையிலேயே சுரோணிதம் அந்த நாட்களில் அதிகரித்திருக்கிறது. ஆதலால் பெண் குழந்தையும், 4, 6, 8, 10, 12 ஆகிய இந்த நாட்களில் சுரோணிதம் குறைவதால் சுக்கிலாதிக்கத்தால் ஆண்குழந்தையும் பிறக்கும்.

பெண்ணின் வீட்டு விலக்கான 14 அல்லது 15 ஆவது நாள் முதல் 30 நாள் வரைக்கும் கருவை அடைக்கலமாக வைத்திருக்கும் கருக்குழியானது, விந்து சென்றடைந்தால் தாமரை போல் பூத்திருந்த கருப்பை மலரிலுள்ள இதழ்கள் மூடிக்கொள்வதைப் போல் ஓரோர் நாளைக்கு ஓரோரிதழாய் மூடிக்கொள்ளும். அப்போது கருவானது உற்பத்தியாகி வளர்ச்சி பெறத் தொடங்கும் எனச் சித்தர் நூல் குறிப்பிடுகிறது.

"தாண்மையன்றிப் பதினாறு இதழாய்நின்ற
தாமரைபோல் மலர்ந்திருக்கும் சாற்றைக் கேளு
தாண்மையன்றி தினமொன்று இதழ்தானொன்று
தருவானக் கருக்குழிதான் மின்னார்க்குள்ளே" (அகத்தியர் வல்லாதி 600, 79:2-3)

"வாயுவுடன் விந்ததுவும் மலர்க்குள் சேர்ந்தால்
மலரிலுள்ள இதழ்களெல்லாம் மூடிக்கொள்ளும்" (அகத்தியர் வல்லாதி 600, 81:1)

## கருப்பம் குறித்த ஆராய்ச்சி

கருப்பம் எப்படி உருவாகின்றது என்பதை ஆரம்பகாலத்தில் அறிந்தவர்கள் சித்தர்களே ஆவார்கள். குழந்தை கடவுள் அருளால் உண்டாகிறது என்று மேல்நாட்டவர் நம்பி இருந்த காலத்தில் தமிழ் மருத்துவர் கருப்பக் கோளை ஆய்ந்து தெளிந்து இலக்கியங்

கண்டார்கள். இந்த இலக்கியங்களில் கூறப்பட்டுள்ள தெள்ளத்தெளிந்த கருத்துக்களில் ஒன்றுகூட மாறாமல் இன்றுவரை ஏற்றக் கொள்ளக் கூடியதாக இருக்கிறது.

குழந்தை ஆணா, பெண்ணா என்பதை அறிவதற்கான ஆராய்ச்சி இன்றும் நடக்கிறது. மூன்று மாதம் கழித்தும் ஏன் ஐந்து மாதங்களில் கூட, ஆறு மாதம் கழித்தும் உறுதியாகச் சொல்ல முடியாத நிலை இன்றைய மருத்துவ முறையிலும் உள்ளது. வியத்தகு விஞ்ஞான கருவிகள் வளர்ந்தும் கருப்பத்திலுள்ள குழந்தை ஆண், பெண் என்று நிச்சயிக்க முடியாமலிருக்கிறது. எந்தவிதக் கருவிகளைக் கொண்டும் சோதித்துப் பார்க்காமல், கருத்தரித்த சில விநாடிகளில் கருவில் வளரப்போகும் குழந்தை அதுதான் என்பதை நாமே உடன் அறிந்து கொள்ள எளிய வழிகளைச் சித்தர்கள் கூறியுள்ளார்கள் என்பதை உணர்ந்து கொள்ள வேண்டும்.

முறையாக ஆணும் பெண்ணும் உடலுறவில் ஈடுபட்டு இன்பம் எய்தி மௌனமுற்றதும், பெண்ணின் மூச்சு வலப்பக்கமாக ஓடினால் ஆண் கரு தரித்து விட்டது என்றும், இடப்பக்கமாக ஓடினால் பெண் கரு தரித்து விட்டது என்றும், இருமூச்சும் சமமாக ஓடினால் ஆண் பெண் தன்மையற்ற கரு தரித்தது என்றும் அறியலாம் எனச் சித்தர் இலக்கியங்கள் கூறுகின்றன.

''குழவியுமாணாய் வலத்தாதே யாகில்
குழவியும் பெண்ணாமிடத் தாதுவாகில்
குழவியுமிரண்டாமபான னெதிர்க்கில்
குழவியுமலியாங் கொண்டகா லொக்கிலே'' (குணவாகடத்திரட்டு – 12)

மேலும், ''கொண்ட நல்வாயவ்விருவர்க்கு மொன்றிடில் கொண்ட குழவியும் கோமளமாய் விடும்'' (குணவாகடத்திரட்டு – 13:3) என்பதால் வாயுக்கள் ஆண் பெண் இருவருக்கும் ஒரேவிதமாக இருக்குமானால் அப்போது தரித்த குழந்தை கானல்நீரைப் போலாகி விடும் என்றும் விளக்கக் காணலாம்.

புணர்ச்சியின் பொழுதுதான் ஆணிலிருந்து பெண்ணிற்குச் சுக்கிலத்தினூடாக விந்துப் பரிமாற்றம் நடைபெறுகிறது. சுக்கிலத்துடன் செல்கின்ற விந்து இருவகையானது. ஆனால் அவை சந்திக்கவுள்ள முட்டையோ ஒரே தன்மையானது. லிங்கத் தீர்வை அதாவது, விருத்தியுறுகின்ற குழந்தை ஆணா? பெண்ணா? என்பது கருக்கட்டும் பொழுது அதாவது புணர்ச்சியின் பின்னரே தீர்மானிக்கப்படுகிறது. முட்டையைப் பெண்ணினை உருவாக்கும் விந்தானது (N+X) கருக்கட்டுமாயின் அக்குழந்தை பெண்ணாகவே (2N+XX) விருத்தியுறும். முட்டையை ஆணினை உருவாக்கும் விந்து (N+Y) கருக்கட்டுமாயின் விருத்தியுறும் முளையம் ஆணாகவே (2N+XY) இருக்கும். இது இன்றைய விஞ்ஞானம் தரும் விளக்கம். இதனை மூலச்சித்தராகிய திருமூலர் ''ஆண்மிகில் ஆணாகும் பெண்மிகிற் பெண்ணாகும்''

(திரும.478:1) என்கிறார். ஆண் பெண் சேர்க்கையின்போது ஆண்பண்பு மிகுந்தால் குழந்தை ஆணாகும், பெண்பண்பு மிகுந்தால் குழந்தை பெண்ணாகும் என்கிறார் திருமூலர். ஆண்பண்பு என்பது ஆணின் தன்மைக்குக் காரணம் என்பதே பொருளாகும். பெண்பண்பு என்பது பெண்ணின் தன்மைக்குக் காரணம் என்பதே பொருளாகும்.

திருமூலர் இதற்கும் மேலே சென்று நபும்சக கருப்பம் உருவாவது பற்றியும் கூறியுள்ளார். ''பூணிரண் டொத்துப் பொருந்தில் அலியாகும்'' (திரும.478:2) என்கிறார். புணர்ச்சியின் போது ஆண்பெண் குணங்கள் சமமாக இருந்தால் நபும்சகமாகக் குழந்தை விருத்தியுறும் என்று கூறியுள்ளார். சில சமயங்களில் சில விகாரங்களின் காரணமாக முட்டையில் N+X க்குப் பதிலாக N+XX தோன்றுவதும் உண்டு. இது அதீத நிகழ்ச்சியே. அத்தகைய சந்தர்ப்பங்களிலே முளையத்தில் 2N+XX அல்லது 2N+XY க்கும் பதிலாக 2N+XXY தோன்றும் சாத்தியம் உள்ளது. இதனையே தான் திருமூலர் ஆண்பெண் சமமாகில் அலிதோன்றும் என்கிறார்.

**கரு உற்பத்தியும் வளர்ச்சியும்**

ஸ்திரியின் கருப்பாயத்தில் விந்தானது பாய்ந்து குதித்துக் கண்டிப்பும் பேரிகையும் போல, கண்டித்துச் செல்லும்.

''பாண்மையென்ற விந்தங்கே யூறும் போது

பாயுமப்பா வன்னியொடு வாயுந்தானே'' (அகத்தியர் வல்லாதி 600 – 79:4)

மேலும், ''மூர்க்க பவளப்பையின் முத்துரித்தாற் போல

முனையறுகு நுனி பனிப்போல் சுரோணிதத்திற் சேர்ந்து'' (யூகிமுனி தத்துவஞானம் - 26.1-2)

என்பதனால் நாதமானது பவளப்பையைப்போலவும், முத்துப் போன்ற வடிவமும் அறுகம்புல்லின் முனை நுனியில் கிடக்கும் பனித்திவலைப் போன்ற உருவமும் தன்மையும் உடையதெனப்பட்டது. இவ்வாறான நாதத்தோடு விந்தானது சேரும்போது,

''தார்க்கவே சுரோணி தந்திரண்டு தன் ரூபமாகித்

தமர்வாசல் தனைமூடும் வாயுதானும்'' (மேலது, 26.3-4)

என்பதால் விந்தானது நாதத்தைத் தாக்கித் தொளை செய்து, உட்சென்று கலந்து தன் உருவம் போலாகச் செய்யும். உருவமாகின்ற காலத்தில் செய்யப்பட்ட தொளை மூடிக்கொள்ளும். பயிர் விளையும்படியான தோட்டத்தைப் பாதுகாக்க அதனைச் சுற்றி எங்ஙனம் வேலி அமைக்கிறார்களோ, அதைப்போல திரண்டநாதம் தன்னைச் சுற்றி வேலி அமைத்துக் கொள்கிறது. இதனை,

''வேர்க்கவே வேலிபோல் வளைந்து காக்கும் விந்துவுடல்

பிராணவாயு விளக்கலாமே''

என்பதால் அறியலாம்.

விந்தோடு பிராணவாயு, உதானவாயு, வியானவாயு ஆகிய மூன்றும் சேர்ந்தே உட்சென்று கருவை வளர்ச்சியடையச் செய்கின்றன. விந்துவுடன் பிராணவாயு கலந்து விந்துவிற்கு உயிர் கொடுப்பதாகவும், உதானவாயுமே அந்த விந்தை கருவாக வளரச் செய்வதாகவும் வியான வாயு இவற்றோடு கலந்து நிற்பதாகவும் சித்தர் நூல்கள் குறிப்பிடுகின்றன.

''விளக்குகின்ற வபானவாயு வெளியில் நிற்கும்
விந்துவுடன் பிராணவாயு வுடல்கலக்கும்
களக்குகின்ற வதானனது கரு வளர்க்கும்
கருவுக்குள் வியானன் மூன்றும் கலக்கும்'' (யூகிமாமுனிவர் வைத்திய சிந்தாமணி - 18)

இவ்வாறு ஏற்பட்ட கரு படிப்படியாக, தினந்தோறும் பத்துத் திங்கள் வரை வளருகிறது. முதல் நாள் - ''செப்பியதாம் தினம் ஒன்றில் கடுகு போலாம்'', இரண்டாம் நாள் - ''மல்லி போலாம்'', மூன்றாம் நாள் - ''மிளகு போலாம்'', நான்காம் நாள் - ''அவரை வித்தாம்'', ஐந்தாம் நாள் - ''குமிழி போலாம்'', ஏழாம் நாள் - ''புன்னைக் காயைப் போலாம்'', எட்டாம் நாள் - ''பஞ்சபூதமதிலுண்டாம் பஞ்சவர்ணம் அதில் தோன்றும்'' என்பதால் பஞ்சபூதக் கூறுகள் கருவில் உற்பத்தியாகி அவைகளின் வண்ணங்கள் உண்டாகும் எனப்பட்டது. ஒன்பதாம் நாள் - ''காக்கை முட்டை போலாம்'', பதினைந்தாம் நாள் - ''பத்து முதல் ஐந்து நாளும் வேகுமே கோழி அண்ட வடிவமாகும்'', முதல் திங்கள் - ''வாழைப்பூவே'' (அகத்தியர் வல்லாதி 600, 81) என்றவாறாக குறிப்பிடப்படும் கரு வளர்ச்சி பற்றி யூகிமுனி தத்துவ ஞானம் -27 பாடலினூடாக வெளிப்படுத்தியுள்ளார்.

''இளக்குகின்ற வைந்தாநாள் கருப்போலாகும்
ஈரைந்தாம் நாள்தனிலே திரளும்பாரு
முறைக்கு மூவைந்தாநாள் முட்டைபோலாம்
முற்றிங்கள் கம்பமாய் முனைபோலாமே'' (தத்துவ ஞானம்-27)

இதேபோல்,

''ஆகாநாள் விந்துவிட்ட ஐந்தாம்நாள் கருப்போலாகும்
போகஈ ரைந்தாம் நாளிற் பொருந்திய முட்டை போலாம்
ஏகமாதத்தில் பிண்டம்'' (அகத்தியர் பிண்டோற்பத்தி-32)

என்றுரைக்கிறார்.

ஒரு திங்களில் தலையுண்டாகும் எனப்பட்டது. ''கழற் கொடிக்காய் போற்றிரண்டு சிரசுமாமே'' (அகத்தியர் வைத்திய சாரம்) என்பதில் கழற்கொடிக்காய் போல் திரளும் என்பதை டாக்டர் சி.துரைராசன் அவர்கள் தன் கருவுற்பத்தி ஆராய்ச்சியில் கழற்சிக்காயின்

மேலுள்ள சிறுமுட்களைக் கவுரவுறை முளைகளுக்கு ஒப்பிடுகின்றார். இதிலிருந்து தமிழ்ச் சித்தர்களின் நுட்பம் புலனாகும்.

தொடர்ந்து கரு வளர்ச்சி தொடர்பாக நோக்குகின்ற போது, இரண்டாம் திங்களில் தலை, கழுத்து, முதுகு என்பவை முழுமையடையுமாம். ''பூவிலே இரண்டு திங்கள் கழுத்துண்டாகும் புகழ்சிரசு முறுப்பாகும்'' (அகத்தியர் வல்லாதி 600, 82:1), ''ஆகுமே இரண்டாந்திங்கள் தலை முதுகு தோன்றும்'' (யூகிமாமுனிவர் வைத்திய சிந்தாமணி 800 - 19). மூன்றாம் திங்களில் இடுப்பு, கை, கால் போன்ற உறுப்புக்கள் வளரும் என்பதை, ''மூன்றாம் திங்கள் நாவிலே சந்து கால் கையுண்டாகிச் சட்டகம் போல் வடிவாகி விரலுமுண்டாம்'' (அகத்தியர் வல்லாதி 600, 82:2), ''அடு மூன்றாந்திங்கள் அரை விரல் கை காலாம்'' (யூகிமாமுனிவர் வைத்திய சிந்தாமணி 800 - 19) எனும் பாடல்களால் அறியலாம். நான்காம், ஐந்தாம் மாதங்களில் காது, நாக்கு, வாய், மூக்கு போன்ற உறுப்புக்கள் வளர்ச்சியடையுமாம் என்பதை, ''நாலிலே வாய் மூக்கு முண்டாம் நவிலுகின்றேன் மாதம் ஐந்தில் செவியுண்டாகும்'' (அகத்தியர் வல்லாதி 600, 82:3), ''நாமே நாலாந்திங்கள் பதமூக்காகும் நாலவைந்தாந் திங்கள் செவி நாவு கண்ணாம்'' (யூகிமாமுனிவர் வைத்திய சிந்தாமணி 800 - 19) என்ற பாடலடிகளாலும், ஆறாம் மாதத்தில் மலசலத் துவாரங்கள், நகங்கள், நரம்புகள் உண்டாகும் என்பதை, ''ஆறாந்திங்கள் குய்பதித் துவாரம்'' (அகத்தியர் வல்லாதி 600, 82:4), ''ஆறாந்திங்கள் வரு நகங்களாகும்'' (யூகிமாமுனிவர் வைத்திய சிந்தாமணி 800:19), ''ஆறாந்திங்கள் பொதிந்திடும் நகமே யெய்தும் உஞ்சிய மலசலங்கள் ஒத்ததோர் நரம்புண்டாகும்'' (தன்வந்திரி), ''மலசலத்துவாரம் பெரிதுண்டாம் திங்களாறில்'' (பராசரர்) போன்றவைகளாலும் நன்கு அறியலாம்.

தொடர்ந்து ஏழாம் மாதத்தில் நரம்புகள் பூரணமடையும், மூச்சுவிடும் அவயவம் உண்டாகும், குடல் பூரணமடையும் என்று கரு வளர்நிலை கூறப்பட்டுள்ளது. இதனை, ''ஏழுக்கும் நரம்புதானே எழுபத்தீராயிரந்தான் நாடி'' (அகத்தியர் வல்லாதி 600, 82:4, 83:1), ''மருவியே வேழாந் திங்கள் மயிரெலும்பு நரம்பாம் தாகுமே நடமொடு சலமலங்கள் தயங்கியதோர் தாதுவொடு மூச்சுண்டாமே'' (யூகிமாமுனிவர் வைத்திய சிந்தாமணி 800:19), ''நரம்புடனாடி சந்து நண்ணிய குடங்கள் கொப்பூழ் பரந்த கால் கரங்களுண்டாம்'' (தன்வந்திரி) என்பதாலறியலாம். எட்டாம் திங்கள் முதல் தாய் உண்ட உணவின் சாரம் அருவியாகப் பாய்ந்து கபாலத்தின் வழியாகச் சென்று உடலைப் பெருக்கச் செய்யும் என்பதையும் சித்தர் இலக்கியங்களில் பரக்கக் காணலாம். ''உரம்பவே தாய் புசிக்கும் மன்னரசம் உச்சி வழித் தானிறங்கி யுடல் பெருக்கம்'' (வைத்தியசாரம்), ''மூச்சுண்டா மெட்டினிற்றாயுண்ட சாரம் முனியான கதிர்போல அருவி பாய்ந்து தோச்சுண்ட கபாலத்தின் வழியேசென்று சுத்தமலம் பிள்ளைக்குத் தொடர்ச்சியாகும்'' (யூகிமாமுனிவர் வைத்திய சிந்தாமணி 800:20).

ஒன்பதாம் மாதத்தில் அறிவு உண்டாகும். உயிர் தான் வந்து மறைஞானம் உண்டாகின்றது என சித்தர் இலக்கியங்கள் கூறுகின்றன. அதாவது அறிவு ஏற்பட்டுள்ளது என்பது பொருள். மகவிற்கு முன்னமே உயிர் உள்ளது. அது கனவு உறக்கம் என்ற அவத்தைகளிலிருந்து ஓரறிவு ஈரறிவு என்று படிப்படியாகப் பெற்று ஒன்பதாம் திங்களில் ஐந்தறிவோடு பகுத்தறிவும் பெற்றது என்பது பொருள். இதனை யூகிமுனி பின்வருமாறு குறிப்பிட்டுள்ளார்.

''ஒன்பதிலேயறிவு தோன்றி பிறப்பித்தோன்
தனைநினைத்து தவமே செய்து
கூச்சுண்டாம் கும்பிட்டு அருள்தாவென்று
கொடிய பத்தாம் திங்கள் குரு பார்வையாமே'' (யூகிமாமுனிவர் வைத்திய சிந்தாமணி800:20)

மகவு, கருப்பையில் 'தவம் உறும் நிலை' யாகும் என்கிறார். அதாவது தலைவணங்கி கால்களை மடக்கிக் கைகளைக் கட்டியிருப்பதாகும். தொடர்ந்து குரு பார்வை உண்டானதும் தாயின் வயிற்றிலுள்ள அபானவாயு சிசுவை கீழ்நோக்கித் திருப்பி வெளியே வர தயாரான நிலையில் வைக்கும். இந்நிலையில் சிசுவின் முன் ஜென்மங்கள் அனைத்தும் மறந்து விடுமாம். மேலும் மாயா சக்தி, கிரியா சக்தி மற்றும் அதன் பழைய (வினைப்பயன்கள்) நினைவுகள் அனைத்தும் மறந்து அழுதுகொண்டே பூமியில் வந்து விழுமாம் என்பதைப் பின்வருமாறு சொல்கிறார்.

''பார்வையா மபானன்கீழ் நோக்கி வைக்கும்
பாலகனும் பார்தனிலே பயின்றபின்பு
ஆர்வையாய் முன்னறிவு மசதியாகி
அழுதுகொண்டு வாதமத்திற் கருவிபாசம்
மார்வைமா யாசக்தி கிரியாசக்தி
மயக்கத்தி லறிவிழந்து வினையினாலே'' (யூகிமாமுனிவர் வைத்திய சிந்தாமணி 800: 21)

தொடர்ந்து, பத்து மாதம் கழிந்த பின்னர் நெருப்போடு வாயுமிஞ்சிக் கவிழ்ந்து தானே சிரந்திருப்பிப் குழந்தை பிறக்கிறது. அப்போது அதன் முன்ஜென்ம வினைகள் அனைத்தும் அதனுடன் வந்து சேர்ந்து கொண்டு, கொடியிலே மலர்ந்த சுரைக்காய் போல தாய்க்கொடியுடன் பூமியில் வந்து பிறக்கிறது.

**நிறைவுரை**

இன்றைய நவீன மருத்துவ முறைகளுக்கெல்லாம் முன்னோடிக் கருத்துக்களை தம் பாடல்களூடாக தெளிவுறுத்தியவர்கள் சித்தர்கள். அண்டத்திலுள்ள சேர்க்கைகள் பிண்டோற்பத்தியிலும் உண்டு என்பதைத் தெளிவுபடுத்தி, அதனூடாக கருவுற்பத்தியின்

அடிப்படையை இயற்கையோடு இணைத்துப் பார்த்த பெருமை சித்தர்களையே சாரும். ஆணும் பெண்ணும் முறையாகக் கூடி இன்பம் துய்த்த பின்னர், எவ்விதம் கருப்பாயத்தினுள் விந்தானது உட்சென்று பின்னர் கருவாக உருவாகி வளர்ந்து பத்து மாதங்களில் குழந்தையாகப் பிறக்கிறது என்பதை சித்தர்கள் வெளிப்படுத்தியுள்ளனர். கருப்பம் உண்டாகும் முறை, ருதுவாகும் காலம், கரு வளர்ச்சி என்ற நிலைகளில் இச்சிந்தனை எடுத்தாளப்பட்டுள்ளது. கருக்கட்டப்பட்ட முளையம் ஆணா? பெண்ணா? என்பதைத் தெரிந்து கொள்ளும் நுட்பமும், கருவானது ஒவ்வொரு மாதங்களிலும் ஒவ்வொரு உறுப்புக்களின் வளர்ச்சியைப் பெற்று பத்தாவது மாதத்தில் குழந்தையாக, அதனது முன்ஜென்ம வினைகளின் பயன்களுடன் பூமியிலே அவதரிக்கின்றது வரை துல்லியமாகக் கணித்து மிகைபடக் கூறியுள்ளார்கள் சித்தர்கள் என்பதை அவர்தம் பாடல்கள் எடுத்துக் காட்டுகின்றன. இக்கருத்துக்கள் இன்றைய விஞ்ஞான உலகின் மருத்துவர்களாலும் மறுக்கவும் நிராகரிக்கவும் முடியாத தன்மையில் சிறப்புற்றுத் திகழ்கின்றன. ஆகவே இந்து அறிவியற் பாரம்பரியத்தில் தொன்மையானதும் நிதர்சனமானதுமான சித்த மருத்துவத்தை நிலைநிறுத்திய சித்தர்களின் பாடல்கள் கருவளர்ச்சி குறித்த சிந்தனைகளை யதார்த்தமான நிலையில் எடுத்து விளக்கி நிற்கின்றமை இந்து மருத்துவப் பாரம்பரியத்துக்குக் கிடைத்த வெற்றியே எனலாம்.

## உசாத்துணை


ஆறுமுகசுவாமிகள், (1883), குணவாடகம், பரப்பிரம முத்திராக்ஷரசாலை, திருவொற்றியூர்.

இராமநாதன்,பொன்., (2004), சித்தர்களும் சித்தமருத்துவமும், சித்தமருத்துவஅலகு, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், கைதடி.

………………., (2009), மருத்துவ நோக்கில் சித்தர்களும் தத்துவ சிந்தனைகளும், கைதடி, சித்த மருத்துவத்துறை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.

இராமையா,பு.ஏ., (2005), செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் பேரகரமுதலி, Vol VI – Part II, செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் அகரமுதலித் திட்ட இயக்க வெளியீடு, சென்னை.

உதயவேந்தன், (2012), அகத்தியர் அருளிய வைத்திய சாரம், மயிலவன் பதிப்பகம்.

தீனதயாள முதலியார்,யு., (பதி), (1924), வைத்திய வல்லாதி அறுநூறு, ஸ்ரீ ஆதிமூலம் பிரஸ், சென்னை.

மார்க்கலிங்க நாயனார்,பி., (உரை), (1913), யூகிமாமுனிவர் வைத்திய சிந்தாமணி 800, (வெளியீடு தெளிவில்லை), சென்னை.

முகுந்தன்,ச., (2022), ''இந்து அறிவியல் நோக்கில் சித்த மருத்துவம்'', ஆன்மிக நுண்மதி சர்வமத மாநாட்டுச் சிறப்பிதழ், யாழ்ப்பாணத் தேசியக் கல்வியற் கல்லூரி, கோப்பாய், யாழ்ப்பாணம்.

நடராசன், (2001), சித்த மருத்துவக் களஞ்சியம் (5ம் பதிப்பு), கவிதா, சென்னை.

யூகிமாமுனிவர், (2005), யூகி வைத்திய சிந்தாமணி (2ம் பதிப்பு), இந்திய மருத்துவம் - ஓமியோபதித் துறை, சென்னை.

லட்சுமணன்,கே.எஸ்., (1977), சித்த மருத்துவக் களஞ்சியம், அருள் நிலையம் சென்னை.

வேணுகோபால்,பு.மு., (1968), உடல் தத்துவம், எழுதுபொருள் அச்சுத்தொழில், தமிழ்நாடு.

ஸ்ரீலஸ்ரீ சுப்பிரமணிய தேசிக சுவாமிகள், (1957), திருமந்திரம் வைத்தியப்பகுதி, திருவாவடுதுறை ஆதீனம்,

Sambasivam Pillai, V.T., (1998), Siddha Medical Dictionary Vol. 04 – Part 02, Chennai – 106, Dept. of Indian Medicine Homoeopathy.